**வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) கம்பனி - 2021**

---

**1. நிதிக்கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிரத்து கம்பனி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளின் பொறுப்புகள்)**

----------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்காய்விற்காக கிடைக்கப்பெறாத ஆவணச்சான்றுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) ரூபா 15,911,944 தொகையான செலுத்த வேண்டிய வற், ரூபா 10,744,888 தொகையான செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியொழுப்புதல் வரி மற்றும் ரூபா 16,393,016 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி என்பவற்றின் உண்மைத் தன்மையை கணக்காய்விற்கு | வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) கம்பனி 2020 சனவரி மாத்திலிருந்து பெறுமதி சேர் வரியின் கீழ் குறைத்து பதிவு செய்திருந்தது. ரூபா 15,911,944 ஆன செலுத்த வேண்டிய வற் மீதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து | கணக்காய்விற்காக போதிய ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்றிராத வரி மதிப்பீட்டுப் பட்டியல், கொடுப்பனவு சீட்டு போன்ற தகவல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதுள்ளது. | கொடுப்பனவு திட்டங்களிற்காக வேண்டப்படுகின்ற தேவைகளிற்காக தயாரிக்கப்பட்ட வற் அறிக்கை மற்றும் பொழிப்பு என்பவற்றின் ஊடாக மெய்மையாய்வு செய்ய முடியும். | |
| (ஆ) | CEB இடமிருந்து பெறவேண்டிய ரூபா 715,802 தொகையான தேசத்தை கட்டியொழுப்புதல் வரி மற்றும் CEB இற்கு செலுத்த வேண்டிய ரூபா 11,791,191 தொகையான விற்பனை வரி என்பவற்றின் உண்மைத் தன்மையை மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்காமையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதுள்ளது. | மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் கோரப்பட்ட போதிலும் CEB எதனையும் வழங்கியிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | ரூபா 84,949 தொகையான பிடித்து வைத்தல் வரி (WHT) தொடர்பான மூலச் சான்றிதழ் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. எனவே, மீதியின் உண்மைத் தன்மையை கணக்காய்வில் மதிப்பிட இயலாதிருந்ததுடன் இதனை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டிலிருந்து வருமான வரிகளிற்கு எதிராக பெறவேண்டிய ரூபா 84,949 ஆன பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரி கோருவதற்று நடவடிக்கை எடுக்க்படும். | -மேற்படி- |

## 1.6 பெற வேண்டிய மற்றும செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| CEB இடமிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 715,802 மற்றும் CEB இற்கு செலுத்த வேண்டிய ரூபா 11,791,191 ஆன மிகையாக சேகரிக்கப்பட்ட வற் என்பன ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்டாமல் இருந்தது. | e-mail மூலமாகவும் வாய் மொழியாகவும் பல நினை வூட்டல்களை அனுப்பியிருந்தும். இந்த ரூபா 715,802 ஆன பெறவேண்டிய NBT மீதியானது CEB செயற்திட்ட கிளையிடமிருந்து நீண்ட காலம் பெறவேண்டியதாக இருந்தது, இதன் பின்னர் வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனியிற்கு CEB மிகவும் அதிகூடிய மீதி செலுத்த வேண்டியிருந்தது. | கம்பனியானது பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கும் CEB இற்கு செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், கம்பனியானது 2015 ஆண்டில் கம்பனி ஒன்றிணைக்கப் பட்டதிலிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வருமான வரி அறிக்கை மற்றும் செலுத்தப்பட்ட வருமான வரி ப்’டில் என்பன சமர்ப்பித் திருக்கவில்லை இதன்படி, மீளாய்வாண்டின் இறுதி யிலுள்ளவாறான செலுத்த வேண்டிய மீதி ரூபா 16,393,016 தொகையாக இருந்தது. | வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரிக்கு முன்னரான இலாபத்திலிருந்து 24 சதவீத வருமான வரி ஏற்பாடுகளுடன் இறுதியாக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஏற்பாடு இதுவரை வருடாந்த நிதிக்கூற்றுக்கள் இறுதியாக்கல் செயற்பாட்டிற்காக செய்யப்பட்டது. கம்பனி தொடங்கியதிலிருந்து முறையான வருமான வரிக் கணிப்பீடு நடாத்தப்பட்டுள்ளது. கம்பனி தொடங்கியதிலிருந்து வருமான வரி கணிப்பீடு மற்றும் இதற்கு சமமான வருமான வரி அறிக்கைகளை கோவையிடன் என்பன இறுதியாக்கல் செயற்பாட்டின் கீழ் உள்ளது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) | தேசத்தை கட்டியொழுப்புதல் வரி அதிகாரச் சட்டத்தின் (முறைாக திருத்தப்பட்ட) பிரகாரம், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ரூபா 10,744,888 தொகையான தேசத்தை கட்டியொழுப்புதல் வரி 2017 இலிருந்து கம்பனியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் உடன்படிக்கை பிரகாரம் கம்பனி காசுப் பாய்ச்சல் கூற்று அடிப்படையில் கொடுப்பனவுகள் தொடங்கப்பட்டிருந்தது. | கருதப்பட்டவாறு கொடுப்பனவுகள் செய்யப் பட்டிருக்காததுடன் செலுத்த வேண்டிய வரி மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 6,669,090 ஆன இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,822,328 ஆகும். இதன்படி, நிதிசார் விளைவில் ரூபா 1,846,762 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ரூபா 16,163,451 ஆல் மனிதசக்தி வழங்கல் சேவை வருமானம் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக உள்ளது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிக்கின்ற அல்லது குறைகின்ற சதவீதத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் இத்தலைப்பின் கீழ் காட்டப்பட வேண்டும்.

.

| வருமானம் / செலவினம் | 2021 | 2020 | அதிகரிப்பு) / (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வருமானங்கள் | 89,905,717 | 73,742,266 | 16,163,451 | 22 |
| விற்பனைக் கிரயம் | 80,652,796 | 65,722,430 | 14,930,366 | 23 |
| நிர்வாகச் செலவினம் | 2,675,216 | 3,223,491 | (548,275) | (17) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பதவியணி ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் என்பவற்றிற்கான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை (SOR) கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மீளாய்வு நிலையில் உள்ளன. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) தயாரித்து அனுமதி பெறவேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2022 ஏப்ரல் 05 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி 23 நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கை, செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2016 இலிருந்து வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை. | 2017 இலிருந்து வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) தொகுதி கம்பனி மொத்தமாக வருடாந்த அறிக்கை தயாரித்திந்ததுடன் தற்போது மொழிபெயர்ப்பு செயற்பாட்டில் உள்ளது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) கம்பனியானது 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சகல நிறுவனங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி’’ நிரல் பிரகாரம், அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்ய வேண்டும். ஆனால், அடைய வேண்டிய உரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அந்த நோக்கங்கள் அடைவதிலுள்ள இடைவெளி அதேபோல முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இதன்படி இந்த நடைமுறை பின்பற்றப்படும். | கம்பனி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி’’ நிரலுடன் இனங்கியொழுக வேண்டும். |